**தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு**

**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கமத்தொழில் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 நவம்பர் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கமத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்களினுள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாணடிற்காக வருமான குறியீடு 2003.07.00 ஆன அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 1,500,000,000 ஆகவிருப்பினும் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 1,235,912,505 ஆகியமையினால் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் சேர்க்கப்படுவதற்கு முடியாது போன வருமானம் ரூபா 264,087,495 ஆக, அதாவது மதிப்பீட்டில் 18 சதவீதமாக காணப்பட்டது. | அரிசி விற்பனை சதொச நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றமையினால் மற்றும் சதொச நிறுவனத்தின் ஊடாக மாவட்ட செயலாளர்களுக்கு பணம் செலுத்தல் நிலுவையாக காணப்படுகின்றமையினால் இந்த நிலுவை தொகை காண்பிக்கப்பட்டிருந்தது.<br>இந்த தொகை அறவிடல் தொடர்பாக மாவட்ட செயலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களினால் சதொச நிறுவத்திற்கு தெரிவித்து மேல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 நிலுவை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கடந்த ஆண்டு இறுதியில் 2003.07.00 ஆம் இலக்க வருமான குறியீட்டின் கீழ் அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் நிலுவை வருமான அளவு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>எனினும் மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை வருமான மீதியாக ரூபா 1,675,035,730 அடையாளப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் | அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு தொடர்புடைய கமத்தொழில் அமைச்சின் செயலாளர், கணக்கீட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு 2003.07.00 ஆம் இலக்க வருமான குறியீட்டினை அறிமுகப்படுத்தப்பட்டமை 2019 திசெம்பர் 17 ஆம் திகதியாகியமையினால் குறித்த வருமான குறியீட்டின் கீழ் நிலுவை வருமானம் | நிலுவை வருமானங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 330,465,660 ஆன தொகை அதாவது, மொத்த ஆரம்ப நிலுவை வருமானத்தில் 19 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. நிலுவை வருமானத்தில் அறவிடப்பட்ட ரூபா 108,657,565 ஆன தொகை தவறுதலாக வகைப்படுத்தப்பட்டு 2003.99.00 ஆம் இலக்க வருமான குறியீட்டின் ஏனைய வருமானம் பெறல் இன் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | அடையாளப்படுத்தப்படுவதற்கான திறன் அவ் ஆண்டிற்கு காணப்படவில்லை. எனவே, 2019 நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதிகள் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறெனினும் 2020 இன் போது, தொடர்புடைய பெறுமதிகள் குறித்த வண்ணம் அடையாளப்படுத்திக் கொண்டமையினால் அப் பெறுமதிகள் 2020 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டது. 26% ஆன அப் பெறுமதியினுள் கணக்கிடப்படும் போது ஏனைய வருமான விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டமையினாலான பெறுமதிகளும் தற்போது திருத்தப்பட்டுள்ளதுடன், இன்னுமாக அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 301,450,022.16 ஆக காணப்பட்டது. | |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | --------------------------------- | ---------------------------------------- | ------------------- |
| (அ) | அத்தியாவசியமாக ஏற்கக்கூடிய செலவின விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிராமையின் காரணத்தினால் 02 மூலதன செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,400,000 ஆன நிதியேற்பாடு மற்றும் 02 மீண்டெழும் செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,300,000 ஆன நிதியேற்பாடு முழுமையான சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலை காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு பயணங்கள் மேற்கொள்ளாமையினால் எஞ்சியமை, முதன்மை தொழில் அமைச்சிற்கு சொந்தந்தமாக காணப்பட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் தேசிய வரவுசெலவு திணைக்களத்தினால் கமத்தொழில் அமைச்சிலிருந்து அகற்றாமையின் அடிப்படையிலான சேமிப்பு மற்றும் IFAD நிறுவனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நுண்கடன் பெற்றுக்கொடுத்தல் இடைநிறுத்தலினால் சேமிக்கப்பட்டிருந்தது. | நி.பி 50 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு தயாரிக்கப்படும் போது சரியான முன்கணிப்பு மேற்கொள்ளப்படாமையின் காரணத்தினால் 15 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 21 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய | 2019 ஆம் ஆண்டில் 2020 ஆம் ஆண்டிற்காக வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போதிருந்த அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் பதவியணியின் அடிப்படையில் தயாரித்து மதிப்பீட்டிற்காக நிதியேற்பாடு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாட்டில் 10 சதவீதத்தினை பார்க்கிலும் அதிகமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மேற்படி மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1,641,700,000 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 532,446,866 ஆன அதாவது 32 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதுடன், இறுதியில் ஒரு பதவியணிக்காக மட்டும் கொடுப்பனவு செலுத்தலினால் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | |
| (இ) | 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 546,220,000 நிதியேற்பாடுகளில் 18 சதவீதமான ரூபா 97,600,000 ஆன நிதியேற்பாடு நி.பி 66 மற்றும் 69 ஊடாக ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.<br>நிதியேற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் அவ் 6 செலவின விடயங்களில் ரூபா 35,275,997 ஆன நிதியேற்பாடு இன்னுமாக சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலை காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு பயணங்கள் மேற்கொள்ளமையினால் சேமிப்பு ஏற்பட்டுள்ளமையினால் நிதியேற்பாடு தேவையான ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.<br>முதன்மை தொழில் அசைச்சிற்குரியதாக காணப்பட்ட மதிப்பீட்டு பெறுமதிகள் தேசிய வரவுசெலவு திணைக்களத்தினால் கமத்தொழில் அமைச்சிலிருந்து அகற்றப்படாமையினால் ஏற்பட்ட சேமிப்பாகும்.<br>2020 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்த பணிகள் உரிய காலத்தில் நிறைவடையாமையினால் சேமிக்கப்பட்டமை. அது சாதாரண சேமிப்பாகும். | -மேற்படி- |
| (ஈ) | 12 செலவின விடயங்களுக்காக நி.பி 66 மற்றும் 69 கீழ் கூட்டுத்தொகை ரூபா 97,600,000 ஆன நிதியேற்பாடு ஏனைய செலவின விடயங்களிலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அதில் 10 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் அவ் செலவின விடயங்களின் அடிப்படை நிதியேற்பாடு 10 சதவீதம் தொடக்கம் 800 சதவீதம் வரையாக காணப்பட்டது. | 20/2018 ஆன பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒருங்கிணைந்த கொடுப்பனவுகள் அதிகரித்தல் மற்றும் அமைச்சின் பதவியணிக்காக மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை,<br>தேவைப்பாடுகள் அதிகரித்தல் மற்றும் காகிதபொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் விலை அதிகரித்தல், கொவிட் 19 தொற்று நிலையினால் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதியளிப்பதற்கு நேரிட்டமை, கமத்தொழில் நிலைய கட்டிடத்தில் கமத்தொழில் அமைச்சு ஸ்தாபிப்பதற்கு ஏற்பட்டமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாடுகளுக்காக மதிப்பீட்டு நிதியேற்பாடு போதுமானதாக காணப்படாமை போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்தது. | -மேற்படி- |

## 2.4 முற்பண கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 கணக்கு ஆண்டில் கமத்தொழில் அமைச்சிக்கு தொடர்புடைய முற்பண கட்டுப்பாட்டு கணக்கின் மீதியினை விட தனிப்பட்ட பட்டியலின் கூட்டுத்தொகை ரூபா 22,677 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி அதிகமாக குறிப்பிடல் திருத்தப்பட்ட விதம் தொடர்பில் எந்தவொரு தெளிவுப்படுத்தல்களும் கணக்குடன் முன்வைக்கப்பட்டிராததுடன் நடப்பு ஆண்டில் தனிப்பட்ட கணக்குகளின் மீதி பட்டியல் கட்டுப்பாடு கணக்கினை விட ரூபா 1,598 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு, 2021 ஆம் ஆண்டில் சில அமைச்சுக்களின் மீதிகள் ஒருங்கிணைக்கப்பட்டமை மற்றும் மீண்டும் விலகியமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்கு சீராக்கல்கள் பல காணப்பட்டதுடன் இந்த வேறுபாடு தேடியறியப்பட்டு எதிர்காலத்தில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பண கட்டுப்பாட்டு கணக்கு மீதி மற்றும் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை சமமாக காணப்பட வேண்டியதென்பதனால் வேறுபாட்டிற்கு காரணம் தேடப்பட்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பதுளை மாவட்டத்தில் பதிற் கடமை புரியும் கமத்தொழில் பணிப்பாளரின் வருட ஆரம்ப கடன் மீதி ரூபா 46,510 ஆக காணப்படினும் எந்தவொரு காரணமுமின்றி கடன் தவணை அறவிடப்பாது ஆண்டினுள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | பதுளை மாவட்டத்தில் பதிற் கடமை புரியும் கம்த்தொழில் பணிப்பாளர் திருமதி S.M.A.M.A. குணவர்தனவின் மீதியில் ரூபா 7,240.35 அறவிடப்படப்பட்டுள்ளதுடன் உரிய பிறழ்நிலை தொடர்பாக ஊவா மாகாண கமத்தொழில் பணிப்பாளரிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் மேற்படி மீதி சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | முறையாக கடன் தவணை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | ஆண்டினை மிகைத்த காலம் தொடக்கம் காணப்பட்டு வருகின்ற மரித்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,500 ஆன பண்டிகை முற்பண மீதி அறவிடப்படுவதற்காக தாபன விதிக்கோவையின் xxiv ஆம் | கமத்தொழில் அமைச்சின் கீழ் மொனராகலை மாவட்ட செயலக அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த அலுவலக உதவி தரம் (III) இன் உத்தியோகத்தரான இந்த உத்தியோகத்தர் மரித்துள்ளார். இது வரையில் அவரின் ஓய்வூதியம் அல்லது மரண | தாபன விதிக்கோவையின் xxiv அதிகாரத்தின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரத்தின் 4.6 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிக்கொடை செலுத்தப்பட்டிராததுடன் குறித்த கடன் பணம் மரண பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுவதற்காக மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | சேவையை விட்டுச்சென்று 5 ஆண்டுகளை மிகைத்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 85,704 ஆன கடன் மீதி அறவிடப்படுவதற்காக தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அதிகாரத்தின் 4.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில், டீ.எச் ரங்சாகொடை மற்றும் யூ.ஜீ. பியசேனவின் கூட்டுத்தொகையான ரூபா 44,596 ஆன கடன் மீதி பதிவழிப்பதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சிரிபால பெரேராவின் ரூபா 41,108 ஆன கடன் மீதி தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கபட்டு வருகின்றது. | தாபன விதிக்கோவையின் xxiv அதிகாரத்தின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | அமைச்சின் நிரந்தர பதவியணிக்கு சொந்தமற்ற அமைச்சரொருவரின் ஓட்டுநராக செயற்பட்ட நபரொருவருக்கு 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 5,000 ஆன பெறுமதியில் எந்தவொரு தவணைக் கட்டணமும் செலுத்தப்படாது சேவையை விட்டு சென்றிருந்தனர். 2 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதி அறவிடப்படுவதற்காக தாபன விதிக்கோவையின் 4.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்கள் அமைச்சின் பதவியணியில் சேவையாற்றிய ஓட்டுநரான ஏ.ஜீ கமகே 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட பண்டிகை முற்பணமாகும். அம் மீதியில் ரூபா 5000 ஆன மீதியொன்று இன்னுமாக அறவிடப்பட வேண்டி காணப்படுகின்றதுடன் குறித்த தீர்த்தல் தவறவிட்டிருந்தார். அவரின் பிணையாளியான யூ.அய் விதாரண தற்போது வெளிநாடு சென்றுள்ளதுடன் 2020.09.30 திகதிய 519/14 ஆன கடிதத்தில் குறித்த கடன் பணம் செலுத்துமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டு வெளிநாட்டு முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அறவிடப்படுவதற்கு இன்னுமாக பின்னூட்டல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபன விதிக்கோவையின் xxiv அதிகாரத்தின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | திணைக்களம் மற்றும் அமைச்சிற்கு தீர்க்கப்பட வேண்டிய மூன்று உத்தியோகத்தர்களின் மொத்த பெறுமதியான ரூபா 7,549 ஆன கடன் மீதி மீளாய்வாண்டினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திணைக்களம் மற்றும் அமைச்சிற்கு தீர்க்கப்பட வேண்டிய மீதிகள் முறையாக தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அமைச்சின் கீழுள்ள கமத்தொழில், கிராமிய பொருளாதார நடவடிக்கை, நீர்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் அபிவிருத்தி போன்ற துறைகளில் சேவையாற்றும் சேவையை விட்டுச் சென்ற 29 உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகை ரூபா 793,931 ஆன அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் 05 ஆண்டுகளை மிகைத்து காணப்படினும் அக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | தாபன விதிக் கோவையின் **XXIV** அதிகாரத்தின் 4.6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ---------------------- | ---------------------------------- | ----------- |
| (அ) | மீளாய்வாண்டிற்காக ஒதுக்க சட்டத்தின் பிரகாரம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத மீண்டெழும் செலவு விடயமொன்று மற்றும் மூலதன செலவு விடயமொன்றிற்காக கூட்டுத்தொகை ரூபா 57,432,289 ஆன கடப்பாடுகளுக்கு உடன் பட்டிருந்தமை கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு III) காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் 4 வாக்குப் பதிவு கணக்கின் ஊடாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், முதல் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு இறுதி பிரதான வரவுசெலவு சீராக்கலில் அக் கால கட்டத்திற்காக ஏற்கப்பட்ட செலவு மட்டும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதியேற்பாடாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதில் முதல் வாக்குப் பதிவு கணக்கின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு நீக்கப்பட்டதுடன், அப்போது ஏற்கப்பட்டிருந்த செலவிற்காக மட்டும் மதிப்பீடு ஒதுக்கப்பட்டது. எனினும் ஏற்கப்பட வேண்டிய செலவிற்காக கடப்பாடு பொறுப்புக்களுக்காக உடன்பட்டிருந்ததுடன், இந் நிலையினுள் இந்த கொடுப்பனவிற்காக இடமளிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக பொறுப்புகளுக்கு உடன்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அமைச்சின் 13 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,623,245,000 ஆன தேறிய நிதியேற்பாட்டிலிருந்து ஆண்டினுள் ரூபா 3,614,071,270 ஆன தொகை | 2020 ஆம் ஆண்டில் 4 வாக்குப் பதிவு கணக்கின் ஊடாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், முதல் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு இறுதி பிரதான வரவுசெலவு | நி.பி 94 பிரகாரம் நிதியேற்பாடு மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல் கூடாது. |

| | | |
|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட பின்னர் சேமிப்பாக ரூபா 9,173,730 காணப்பட்டது. எனினும், அச் சேமிப்பினை மிகைத்து ரூபா 2,289,402,972 ஆன கடப்பாடு மற்றும் பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | சீராக்கலில் அக் கால கட்டத்திற்காக ஏற்கப்பட்ட செலவு மட்டும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதியேற்பாடாக பெற்றுக் கொடுப்பட்டது. அதில் முதல் வாக்குப் பதிவு கணக்கின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு நீக்கப்பட்டதுடன், அப்போது ஏற்கப்பட்டிருந்த செலவிற்காக மட்டும் மதிப்பீடு ஒதுக்கப்பட்டது. எனினும் ஏற்கப்பட வேண்டிய செலவிற்காக கடப்பாடு பொறுப்புக்களுக்காக உடன்பட்டிருந்ததுடன், இந் நிலையினுள் இந்த கொடுப்பனவிற்காக இடமளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள்<br>---------------------- | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>--------------------------------- | பரிந்துரைகள்<br>----------- |
|---|---|---|
| கணக்கு ஆண்டு இறுதி திகதிக்கு கட்டுநிதி கணக்கு மீதி திறைச்சேரிக்கு தீர்க்கப்பட்டிருப்பினும் கணக்கு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நாளதுவரையாக்கப்பட்டிராத ரூபா 4,134,769 ஆன கட்டுநதி மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்களினுள் நிகழ்நிலை பணமாக மற்றும் நடைமுறை பொறுப்புக்களினுள் திறைச்சேரிக்கு செலுத்தப்பட வேண்டிய பெறுமதியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இறுதி கணக்கு தயாரிக்கப்படுவது அமைச்சு பேணிச் செல்கின்ற நிதி தரவின் அடிப்படையிலாகும். கட்டுநிதி மீதி திறைச்சேரி கணக்கு மீட்டலானது அமைச்சின் காசுப் புத்தகம் செலவு வைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு, திறைச்சேரி கணக்கிற்கு முறையாக வரவு வைக்கப்பட்டதன் பின்னராகும். உதாரணமாக, வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்படும் போது வழங்கப்பட்ட போதிலும் வைப்புச் செய்யப்படாத காசோலைகள், காசுப் புத்தகத்தில் மீதி குறைதல் சீராக்கப்படினும் நிச்சயமாக வங்கியினால் தடைநீக்கப்பட்டதன் பின்னர் வங்கியின் மீதி குறைவடைதல் காண்பிக்கப்படல் கருத்திற் கொள்ளப்பட்டு அவ்வண்ணம் இந்த விடயத்தினை கவனத்தில் எடுத்தல் தங்களின் இலகுக்காக முன்வைக்கின்றேன்.<br>அதன் பிரகாரம் உரிய முறையில் அமைச்சினால் கட்டுநிதி கணக்கு உரிய திகதியில் தீர்க்கப்பட்டிருப்பதனால் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள விதம் சரியானதாக | இந்த மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்களினுள் நிகழ்நிலை பணமாக மற்றும் நடைமுறை பொறுப்பினுள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

காணப்படுகின்றது. ACA 3 மாதிரிக்கு தொடர்புடைய வேறுப்பாட்டிற்கு காரணங்களுடன் முன்வைக்கப்பட்டிருந்தது இந்த விடயத்தினாலாகும்.

**2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை**<br><br>(i) நி.பி 104(2) | காணாமல் போதல் அல்லது நட்டத்தின் பெறுமதி ரூபா 50,000 இற்கு அதிகமெனின், அவ்வாறான காணாமல் போதல் அல்லது நட்டம் தொடர்பாக இறுதி அறிக்கையின் பிரதியொன்று திறைச்சேரிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் தெரிவுச் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ரூபா 50,000 இற்கு அதிகமான ரூபா 6,285,211 ஆன நட்டம் பதிவழிக்கப்பட்ட 8 வாகன விபத்துக்கள் தொடர்பாக இறுதி பரிசோதனை அறிக்கை திறைச்சேரிக்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | 08 வாகன விபத்துக்களுக்கு தொடர்புடைய இறுதி பரிசோதனை அறிக்கை பொது திறைச்சேரிக்கு முன்வைப்பதற்கு தவறியிருந்தது. விரைவாக அவ் அறிக்கைகள் திறைச்சேரிக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நி.பி 104(4) | முதற்கட்ட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நட்ட பாதிப்பு ஏற்பட்ட திகதியிலிருந்து இரு மாதங்களினுள் முழு அறிக்கையொன்று முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் கணக்கு ஆண்டினுள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 6,302,461 ஆன 09 வாகன விபத்துக்கள் தொடர்பாக முழு அறிக்கையொன்று அமைச்சின் செயலாளருக்கு முன்வைப்பதற்கு 06 மாதங்கள் தொடக்கம் 33 மாதங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. | வாகன விபத்துக்களுக்கு தொடர்புடைய முழு அறிக்கை முன்வைப்பதற்கு தாமதமாகியமையை ஏற்றுக்கொள்கின்றேன். நி.பி 104(1) மற்றும் நி.பி 104(4) பிரகாரம் பரிசோதனைக்காக நியமிக்கப்படுவது அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர்களாவதுடன் , அவ் உத்தியோகத்தர்களுக்கு பணிக்கப்பட்டுள்ள நிரந்தர கடமைகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை என்பதனால் உத்தியோகத்தர்களின் வேலைப்பளு காரணத்தினாலும், பொலிஸ் அறிக்கை கிடைப்பதில் தாமதமாகல் காரணத்தினால் மற்றும் விபத்தினை தாமதமாக தெரிவித்தமை காரணத்தினாலும் முழு அறிக்கை தயாரிப்பதற்கு தாமதமாகியது. எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| -------------- | ----------------------------- | ----------- |
| 2.2 | கமத்தொழில் அமைச்சின் 118-1-10-1-1409 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் நெல் கொள்வனவு செய்வதற்காக கிராமிய அபிவிருத்தி பிரிவிற்கு ரூபா 3,118,000,000 ஆன மதிப்பீட்டு நிதியேற்பாடு மீளாய்வாண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 20 மாவட்ட செயலகங்களுக்காக ரூபா 1,959,912,319 ஆன தொகை நெல் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் 08 மாவட்ட செயலகங்கள் ஊடாக அதற்கு | மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானம் கணக்கிடப்பட்டு அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

தொடர்புடையதாக 118-2003-07-00 ஆம் இலக்க வருமான குறியீட்டின் கீழ் பொது திறைச்சேரிக்கு மாற்றப்பட்டிருந்தது, ரூபா 299,814,540 மட்டுமே ஆகும். இதன் பிரகாரம் நெல் விற்பனையில் அரசிற்கு பெறப்பட வேண்டியதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதுமான நிலுவை வருமானமொன்று கணக்கிடப்பட்டு அவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அமைச்சினால் 2016 ஏப்ரல் 08 ஆம் திகதி குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இராஜகிரியவில் அமைந்துள்ள கட்டிடத்தில் குத்தகை காலம் 2021 ஏப்ரல் 07 ஆம் திகதி வரை காணப்படுகையில் அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் அமைச்சு மீண்டும் 2020 சனவரி 31 ஆம் திகதி தொடக்கம் கமத்தெழில் நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 3 ஆண்டு இறுதியில் மாதாந்த குத்தகை 15 % இனால் அதிகரிப்பதற்கு உடன்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 சனவரி தொடக்கம் 2021 மார்ச் 31 ஆம் திகதி வரை அதிகரித்திருந்த குத்தகை கட்டணம் மற்றும் சேவைக் கட்டணமாக ரூபா 44,239,137 செலுத்தப்பட்டிருந்தது. | பிரச்சனைக்குரிய குத்தகை கட்டண ஒப்பந்தம் 2016.04.08 ஆம் திகதி தொடக்கம் 2021.04.07 ஆம் திகதி வரையான காலத்திற்காக உருவாக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக் காலத்திற்காக குத்தகை கட்டணம் செலுத்தப்படுவதற்கும், பயன்படுத்தப்பட்ட மின்சாரம் மற்றும் நீருக்காக குறித்த கட்டணம் செலுத்துவதற்கும் உடன்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்த காலத்திற்கு முன்னர் ஒப்பந்தத்திலிருந்து விலகாமல் அல்லது நிபந்தனைகளை மீறாமல் ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதற்கு முடியுமான விதத்தில் ஒப்பந்தத்தினை முடிவுறுத்தும் உருப்புரையொன்று ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாமை காரணத்தினால் இவ்வாறு குத்தகை கட்டணம் மற்றும் சேவைக் கட்டணங்கள் மற்றும் மின்சார கட்டணங்களும் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்ததென தெரிவிக்கின்றேன். | காணப்படுகின்ற சட்டத் திட்டங்கள் மற்றும் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |